**DATED : 25.06.2025 MCOP No. 73 OF 2022**

**பெயர் - திரு அபிஷேக்**

**2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) விபத்து சமயத்தில் நான் ஆட்டோவில் பயணம் செய்து கொண்டு இருந்தேன் என்றால் சரிதான். மேலும் என்னுடன் ஆட்டோவில் எத்தனை பேர் பயணம் செய்து கொண்டு இருந்தோம் என்றால், ஓட்டுநரையும் சேர்த்து 4 பேர் பயணம் செய்தோம்.

2) நான் ஓட்டுநரின் அருகில் அமர்ந்து பயணம் செய்தேனா என்றால் இல்லை. நான் பின்னால் அமர்ந்திருந்தேன். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று நான் நேரில் பார்த்தேனா என்றால் இருசக்கர வாகனம் எதிரே வந்து இடித்ததை பார்த்தேன். நான் பின் பக்கம் அமர்ந்திருந்ததால் இடித்ததை நான் தெளிவாக பார்த்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

3) எனது முதல் விசாரணையில் ஆட்டோ கவிழ்ந்ததில் ஆட்டோ விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் எனக்கு குணமாகிவிட்டன என்று சொன்னால் சரியல்ல. காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் தற்போதும் வலி உள்ளது.

4) மேலும் விபத்து நடந்த பகுதி கூட்டம் நிறைந்த பகுதி எனவும், கல்லூாரி உள்ள பகுதி எனவும் சொன்னால் சரிதான்.

5) நான் ஐ.டி.ஐ படித்து விட்டு ஓட்டுநராக பணிபுரிந்து மாதம் ரூபாய் 20000 சம்பாதித்து வருவதாக கூறுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) இரு சக்கர வாகனம் மோதி ஆட்டோ கவிழ எந்தவித வாய்ப்பும் இல்லை என்றும் ஆட்டோ ஓட்டுநரின் கவன குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு மட்டும் தான் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான்.

7) மற்ற யாருக்கும் காயம் ஏற்படாததால் இந்த விபத்திற்கு ஆட்டோ ஓட்டுநரின் முழு கவன குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

8) 2ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் எனக்கு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) 01.01.2021 அன்று TN 31 CP 7465 என்ற 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் தான் விபத்திற்கு காரணம் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.அதன் பேரில் தான் விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கையையும் போலீசார் பதிவு செய்துள்ளனர் என்றால் சரிதான்.

2) இம்மனுவில் 3,4 எதிர்மனுதாரர்களை பொறுத்து நான் எவ்வித இழப்பீடும் கோரவில்லை என்றால் சரிதான். ஆகவே 4ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் எனக்கு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரிதான்.

(மறு விசாரணை இல்லை)